| O.S.No. 64/2023 | DW1 : திரு. பெருமாள் த/பெ. திரு. அண்ணாமலை | 15-09-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. நான் இந்த வழக்கில் 5–ம் பிரதிவாதி ஆவேன். தாவா B ஷெட்யூல் சொத்து 3 ஏக்கர் 95 சென்ட் ஆகும். தாவா B ஷெட்யூல் சொத்தை எனது தந்தை வழி பாட்டி கண்ணம்மாள் 1974–ல் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். எனது தாத்த பெயர் சின்னகண்ணு முதலியார். எனது தாத்த பெயர் சின்னகண்ணு முதலியாருக்கு கண்ணியப்பன், சுப்பிரமணி, அண்ணாமலை மற்றும் ராஜவேல் வாரிசுகள் ஆகும். அதில் இரண்டாவது மகன் ராஜவேல் சென்னையில் குடியேறிவிட்டார் என்றால் சரிதான். கண்ணிய்யப்பனுக்கு 2 மகன்கள், 2 மகள்கள் வாரிசுகள் ஆகும். 2–ம் வாதி வெங்கடேசனுடன் பிறந்தவர் காலமாகிவிட்டார். சுப்பிரமணியின் ஒரே மகள்தான் 1–ம் பிரதிவாதி உமாமகேஷ்வரி ஆவார். அண்ணாமலைக்கு நான், 2, 3 பிரதிவாதிகள் வாரிசுகள் ஆவோம்.

2. எனது பாட்டி கண்ணம்மாள் அவருக்கு சொந்தமாக சொத்தான 3 ஏக்கர் 95 சென்ட்டில் பொதுவில் 1 ஏக்கர் 30 சென்ட்டினை 2–ம் வாதிக்கு தான செட்டில்மென்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அதேபோல் 1–ம் பிரதிவாதிக்கும் பொதுவில் 1 ஏக்கர் 30 சென்ட்டினை தான செட்டில்மென்ட் பத்திரம் எழுதி வைத்தார். எனக்கும் என்னுடன் பிறந்த 4 பேருக்கும் சேர்த்து பொதுவில் 1 ஏக்கர் 35 சென்ட்டினை எனது பாட்டி தான செட்டில்மென்ட் பத்திரம் எழுதி வைத்தார். அவ்வாறு செட்டில்மென்ட்படி வந்த சொத்தினை எனது தந்தையும் அவரது சகோதரர்களும் ஊர் பஞ்சாயத்தார் முன்னிலைக்கு வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

3. அதில் 2–ம் வாதி வெங்கடேசனுக்கு மேலண்டை வடமேற்கு பக்கம் 1 ஏக்கர் 30 சென்ட் பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். கிணற்றில் அனைவருக்கும் பொதுவில் 3–ல் 1 பாகம் உரிமை உள்ளது. அந்த கிணற்றுக்கு 2–ம் வாதி விவசாய பம்பு செட் போட்டுள்ளார் என்றால் நானும் வாங்கினேன்,

அதற்கு பின் அவர் போட்டார். அந்த கிணற்று பம்பு செட்டிலிருந்துதான் தண்ணீர் இறைத்து பயிர் செய்து வந்தோம். 1-ம் பிரதிவாதி அவருக்கு வந்த பாகத்தினை 4 பேருக்கு மனைகளாக விற்பனை செய்தார். எங்களுக்கு வந்த பாகத்தில் 12 சென்ட்டினை நாங்கள் 3 பேருக்கு மனைகளாக விற்பனை செய்துள்ளோம்.

4. எனது சகோதாரர் குமார் 7-ம் பிரதிவாதி கிருஷ்ணனுக்கு ஒரு மனையை விற்பனை செய்தார். அதில் 7-ம் பிரதிவாதி வீடு கட்டி வசித்து வருகின்றார். அதேபோல் எனது சகோதரர் குமார் 11-ம் பிரதிவாதி ஆறுமுகத்திற்கு ஒரு மனையினை விற்பனை செய்து அதில் அவர் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அதேபோல் 3-ம் பிரதிவாதி தசரதனும் ஒரு மனையை 12-ம் பிரதிவாதி சேட்டு ஆச்சாரிக்கு விற்பனை செய்து அதில் அவர் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதியிடம் மனையினை கிரையம் வாங்கிய 8-ம் பிரதிவாதி விஜயலட்சுமி அதில் வீடு கட்டி வசித்து வருகிறார் என்றால் இல்லை, அது காலிமனையாகத்தான் உள்ளது. 1-ம் பிரதிவாதியிடம் மனையினை கிரையம் வாங்கிய 9-ம் பிரதிவாதி அதில் மாடு கொட்டகை கட்டி அனுபவித்து வருகிறார். 1-ம் பிரதிவாதியிடம் மனையினை கிரையம் பெற்ற 10-ம் பிரதிவாதி அதில் மாடு கொட்டகை கட்டி அனுபவித்து வருகிறார். 1-ம் பிரதிவாதியிடம் மனையினை 6-ம் பிரதிவாதி கிரையம் பெற்றார். அந்த மனையினை 6-ம் பிரதிவாதி 13-ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து அதில் 13-ம் பிரதிவாதி வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். நானும், 2-ம் பிரதிவாதியும் எங்களுக்குள் 2005-ல் 14 3/4 சென்ட் மற்றும் 68 3/4 சென்ட்டை பொருத்து பரிவர்த்தனை செய்துகொண்டோம் என்றால் சரிதான். அதேபோல் எனது அப்பா 2008-ல் 4-ம் பிரதிவாதி குமாருக்கு .033 1/2 சென்ட்டினை தான செட்டில்மென்ட் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அதேபோல் 2012-ல் தசரதனும், குமாரும் அவர்களுக்கு வந்த சொத்தினை பரிவர்த்தனை செய்துகொண்டனர் என்று சொன்னால் சரிதான்.

5. மேற்சொன்ன எல்லா பத்திரங்களிலும் 4 எல்லை குறிப்பிட்டுதான் எழுதப்பட்டது என்றால் சரிதான். அதில், 2-ம் வாதி வெங்கடேசன் அவருக்கு வந்த சொத்தினை யாருக்கும் விற்பனை செய்யவில்லை. 2-ம் வாதி வெங்கடேசன் தாவா சொத்திற்கு பக்கத்தில் உள்ள குளக்கரை பாட்டைக்கு பக்கத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். மேலே சொன்ன கிரைய பத்திரங்கள், பரிவர்த்தனை பத்திரங்கள் மற்றும் தான செட்டில்மென்ட் பத்திரங்களை பொருத்து 2-ம் வாதி எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் சரிதான். அதேபோல் வாதிகள் வீடு கட்டி அனுபவித்து வருவதை நானோ, எனது சகோதரர்களோ எவ்வித ஆட்சேபணையும் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

6. தசரதனும், குமாரும் பரிவர்த்தனை செய்த பத்திரத்தில் வெங்கடேசன் நிலத்திற்கு கிழக்கு என்று வா.சா.ஆ.5-ல் 4 எல்லை கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் 4-ம் பிரதிவாதி 7-ம் பிரதிவாதிக்கு கொடுத்த வா.சா.ஆ.8 கிரைய பத்திரத்திலும் வெங்கடேசன் நிலத்திற்கு தெற்கு என்று 4 எல்லை கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் 4-ம் பிரதிவாதி 11-ம் பிரதிவாதிக்கு கொடுத்த வா.சா.ஆ.13 கிரைய பத்திரத்திலும் வெங்கடேசன் மனையை வடக்கு எல்லையாக வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதேபோல், நான் எனது அண்ணன் 2-ம் பிரதிவாதி கருணாகரனுக்கு 2021-ல் எழுதி வைத்த வா.சா.ஆ.16 தான செட்டில்மென்ட் பத்திரத்தில் வெங்கடேசன் நிலத்திற்கு தெற்கு என்று எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். தாவா B ஷெட்யூல் சொத்தின் சர்வே எண். 96 – 3.32 ஏக்கர் மற்றும் சர்வே எண். 97-ல் 26 சென்ட், சர்வே எண். 98-ல் 19 சென்ட் மற்றும் சர்வே எண். 101/2-ல் 18 சென்ட் என்றால் சரிதான், ஆனால், 101/2-ல் 18 சென்ட் எங்கள் அனுபவத்தில் இல்லை. அந்த இடமமானது தாவா சொத்திற்கு கிழக்கே அமைந்துள்ளது. அந்த இடத்தினை யார் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சர்வேயர் வந்து அளந்து பார்த்தபோது யார் அனுபவித்து

வருகிறார்கள் என்று சொல்லவில்லை. அந்த இடத்தினை நில அளவையர் அடையாளப்படுத்தி காட்டினாரா என்றால் இல்லை.

7. 08.07.2008-ல் எனது அப்பா 4-ம் பிரதிவாதி குமாருக்கு எழுதிய வா.சா.ஆ.5 தான செட்டில்மென்ட் பத்திரத்தில் சர்வே எண். 1101/2 சொத்தையும் சேர்த்துதான் எழுதியுள்ளார் என்றால் சரிதான், அது பட்டாவை வைத்து எழுதப்பட்டது. 1-ம் பிரதிவாதி விற்பனை செய்த சொத்திற்கு தெற்கே தெரு உள்ளது என்றால் சரிதான். அந்த தெருவிற்கு தெற்கு பக்கம் சேகர், பஞ்சாட்சரம், புஷ்பலதா, இன்னொரு சேகர், மணி ஆகியோர் வீடு கட்டி வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். சர்வே எண். 96-க்கு மேலண்டை பக்கம் குளத்திற்கு போகும் தெரு உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 96-க்கு வடக்கு பக்கம் குளக்கரை உள்ளது. அதனை கிராம மக்கள் பாட்டையாக உபயோகித்து வருகிறார்கள் என்றால் இல்லை. 1998-ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை ஏற்பாட்டின்படிதான் நாங்கள் அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான். மேற்படி அனுபவத்தை வைத்துதான் மேற்சொன்ன கிரைய பத்திரம், தான செட்டில்மென்ட் பத்திரம், பரிவர்த்தனை பத்திரங்களின் 4 எல்லைகள் எழுதப்பட்டது என்றால் சரிதான். அதன்படிதான் வெங்கடேசனுக்கு சர்வே எண். 96-ல் வடமேற்கு பகுதியில் 1 ஏக்கர் 30 சென்ட்டினை அவர் பாகமாக அனுபவித்து வருகிறார் என்று சொன்னால், அவர் எங்களை விட அதிகமாக அனுபவித்து வருகிறார். எவ்வளவு விஸ்தீரனம் அதிகமாக அனுபவித்து வருகிறார் என்றால் 40 சென்ட் அளவிற்கு அனுபவித்து வருகிறார்.

8. நான் எனது பதிலுரையில் உமாமகேஷ்வரிக்கு சொந்தமான 28 சென்ட்டினை 2-ம் வாதி அனுபவித்து வருகிறார் என்று சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். மேற்படி 28 சென்ட்டினை ஒப்படைக்கவேண்டும் என சொல்லி நாங்களோ, 1-ம் பிரதிவாதியோ நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான், உறவினர்கள் என்பதால் எடுக்கவில்லை. 2-ம் வாதி 20 வருடங்களாக அனுபவித்து வந்ததின் அடிப்படையில்தான் 06.04.2022

-ல் அவரது மனைவியான 1-ம் வாதிக்கு தான செட்டில்மென்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால் எங்களுக்குள் பாகப்பிரிவினை ஆகவில்லை. வாதிகளுக்கும், 2-ம் பிரதிவாதிக்கும் அடிக்கடி தகராறுகள் ஏற்பட்டு காவல் நிலையம் சென்றுள்ளார்கள் என்றால் சரிதான். கடந்த 20 வருடங்களாக இருவருக்கும் தகராறுகள் ஏற்பட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது.

9. சர்வே எண். 96-ல் எங்களுக்கும் நிலம் வந்தது என்றாலும், 1-ம் பிரதிவாதிக்கும் நிலம் பாகமாக வந்தது என்றாலும் சரிதான், குளத்தின் பாட்டைக்கு பக்கத்தில் எங்களுக்கு பாகம் வரவில்லை. குளத்தின் பாட்டையை 4 எல்லையாக காண்பித்து என் தந்தை 4-ம் பிரதிவாதி குமாருக்கு தான செட்டில்மென்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால் அவ்வாறு இல்லை. தாவா A ஷெட்யூல் சொத்தினை 20 வருடங்களாக 2-ம் வாதி அனுபவித்து வந்ததைத்தான் 1-ம் வாதிக்கு தான செட்டில்மென்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றாலும், அதனை ஆட்சேபிக்க எங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. வாதிகள் எங்களுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தார்கள், நாங்கள் ஊரில் இல்லாததால் வாங்கவில்லை, 2-ம் பிரதிவாதி கருணாகரன் மட்டுமே அதனை வாங்கினார். வாதிகள் கொடுத்த அறிவிப்பினை நானும், 3-ம் பிரதிவாதியும் வாங்க மறுத்துவிட்டதால்தான் அது திருப்பப்பட்டது என்ற சொன்னால் சரியல்ல. நோட்டீஸினை பெற்ற 2-ம் பிரதிவாதி பதில் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை. தாவா A ஷெட்யூல் சொத்து வாதிக்கு உரிமையானது என்றாலும், அதனை நாங்கள் ஆட்சேபிக்க முடியாது என்றாலும், வாதிகளின் வழக்கு தாவாப்படி தீர்ப்பாகவேண்டும் என்றாலும் சரியல்ல. ராணி எனது மாமியார். கோபாலகிருஷ்ணன் என் கணவர். நாங்கள் 4 பேரும் சேர்ந்துதான் வா.சா.ஆ.1 பாண்டினை எழுதிக்கொடுத்தோம் என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.09.15 13:26:27 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**